ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
ஸ்ரீ ரங்கநாயகி ஸமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீ ரங்கநாத திவ்யமணி பாதுகாப்யாம் நம:
ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன் திருவடிகளே சரணம்

ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த

# ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம்

## (9.வைதாளிக பத்ததி)



(உடையவர் போற்றிய நம்பெருமாளின் திருவடிகள்)

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்
ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்
(Email: sridharan_book@yahoo.co.in)

241. நமஸ்தே பாதுகே பும்ஸாம் ஸம்ஸார அர்ணவே ஸேதவே
யதாரோஹஸ்ய வேதாந்தா: வந்தி வைதாளிகா: ஸ்வயம்

**பொருள்** – ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உயிர்கள் பிறந்து இறப்பதையே தனது இயல்பாக உடையது ஸம்ஸாரம் என்ற கடல் ஆகும். இந்தக் கடலில் அணை போன்றுள்ள உனக்கு என் நமஸ்காரங்கள். உபநிஷத்துக்கள் செய்வது என்ன? பெரியபெருமாளைத் துயில் எழுப்பி, உன்னைச் சாற்றிக் கொள்ளவேண்டும் என்பது அல்லவா? (வைதாளிகர்கள் என்பவர்கள் எம்பெருமானைத் துயில் எழுப்புபவர்கள் ஆவர். இங்கே வைதாளிகர்களாக உபநிஷத்துக்கள் உள்ளன என்றார்).

242. உசிதம் உபசரிஷ்யந் ரங்கநாத ப்ரபாதே
விதிசிவ ஸநக ஆத்யாந் பாஹ்ய கக்ஷ்யா நிருந்தாந்
சரண கமல ஸேவா ஸௌக்ய ஸாம்ராஜ்ய பாஜாம்
ப்ரதம விஹித பாகாம் பாதுகாம் ஆத்ரியேதா:

**பொருள்** - ஸ்ரீரங்கநாதா! உனது திருப்பள்ளியெழுச்சிக்கு முன்பாக வந்து விட்ட சிவன், நான்முகன், ஸநகர் போன்றவர்கள் முன் வாயிலில் நிறுத்தப்பட்டுள்ளனர். அவர்களை நீ தகுந்த வழியில் உபசாரம் செய்யவேண்டும். ஆகவே உனது திருவடிகள் என்னும் தாமரைகளின் சுகம் பெறுபவர்களில் முதல் இடம் பிடித்துள்ள பாதுகையை, இதன் மூலம் சக்ரவர்த்தி என்ற பட்டம் பெற்ற பாதுகையை, நீ சாற்றிக் கொண்டு எழ வேண்டும்.

243. பத்மா ஜுஷ்டம் பஜது சரணம் பாதுகா லப்தவாரா
ப்ரத்யாஸந்நா: தவ பரிஜநா: ப்ராதராஸ்தாந யோக்ய:
அர்த்த உந்மேஷாத் அதிகஸுபகாம் அர்த்த நித்ராநுஷங்காம்
நாபீ பத்மே தவ நயநயோ: நாத பச்யந்து சோபாம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதா! காலை வேலையில் உனக்குத் தொண்டு புரியும் பணியாளர்கள் வந்து விட்டனர். உனது தாமரை போன்ற கண்களில் உள்ள உறக்கம் பாதி கலைந்தும் கலையாமலும் உள்ளதால், உனது இமை பாதி மூடியும் திறந்தும் உள்ளது. இந்த அழகைக் கண்டு, நாபிக் கமலத்தில் உள்ள தாமரை மலர், உனது கண்கள் போல மலர்ந்தும் மலராமலும் உள்ளது. இந்த அழகை அவர்கள் அனுபவிக்கவேண்டும். இரவு முழுவதும் உனது திருவடிகளை வணங்கி வருடிய மஹாலக்ஷ்மியின் சேவையை இனிப் பகலில் பாதுகை ஏற்றுக் கொள்ள வேண்டும் (ஆகவே துயில் எழுவாயாக).

244. உபநமதி முஹூர்த்தம் சேஷ ஸித்தாந்த ஸித்தம்
தத் இஹ சரணரக்ஷா ரங்கநாத த்வயைஷா
ம்ருதுபதம் அதிரூடா மஞ்ஜுபி: சிஞ்ஜிதை: ஸ்வை:
உபதிசது ஜநாநாம் உத்ஸவ ஆரம்பவார்த்தாம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதா! சுபமான முஹூர்த்த காலம் வந்துவிட்டது. ஆதிசேஷனின் அவதாரமாகிய உடையவரின் "எம்பெருமானார் தரிசனம்" என்னும் முறைப்படிச் செய்ய வேண்டியவைகள் நடைபெற வேண்டும். உனது திருவடிகளைக் காப்பதில் குறியாக உள்ள உனது பாதுகைகள் மீது உனது திருவடிகளை மெதுவாக எடுத்து வைப்பாயாக. பின்னர் நீ அழகாக நடந்து வரும்போது ஒலிக்கின்ற பாதுகைகளின் ஒலி, மக்களுக்கு அன்றைய உற்சவம் தொடங்கியதை அறிவிக்கட்டும்.

245. ரங்காதீச மருத்கணஸ்ய மகுடா ஆம்நாய ப்ருந்தஸ்ய வா
ப்ரத்யாநீய ஸமர்ப்பிதா விதிமுகை: வாரக்ரமாத் ஆகதை:
வாஹா அரோஹண ஸம்ப்ருதம் ச்ரமபரம் ஸம்யக்விநேதும் க்ஷமா
சீலா ஸஞ்சரண ப்ரியா ஸ்ப்ருசது தே பாதாம்புஜம் பாதுகா

**பொருள்** - ஸ்ரீரங்கநாதா! உன்னுடைய பாதுகையை நான்முகன் முதலான தேவர்கள் வரிசையாக நின்று தங்கள் தலையில் ஏற்கின்றனர். வேதங்களும் தங்கள் தலைகளில் ஏற்றுக் கொள்கின்றன. இவ்விதம் சஞ்சரித்த பாதுகை, இப்போது மீண்டும் உன்னிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இவ்விதமாக பலவிதமான வாகனங்கள் மீது ஏறி சஞ்சாரம் செய்த காரணத்தினால் பாதுகைக்கு மிகுந்த களைப்பு ஏற்பட்டிருக்கும். இவ்விதம் அமர்ந்தபடி சென்ற பின்னர், சற்று நேரம் நீ பாதுகையை அணிநது கொண்டு உல்லாசமாக நடப்பதை அல்லவோ பாதுகை விரும்பி நின்றது? ஆகவே உனது திருவடிகளை அவை தொடவேண்டும்.

246. வ்ருத்தம் க்ரமேண பஹுதா நியுதம் விதீநாம்
அர்த்தம் த்வதீயம் இதம் அங்குரிதம் தவாஹ்ந:
நீளாஸகீபி: உபநீய நிவேச்யமாநா
மங்த்தும் ப்ரபோ த்வரயதே மணிபாதுகே த்வாம்

**பொருள்** – ப்ரபோ! ஸ்ரீரங்கநாதா! வரிசையாகப் பல லட்சம் நான்முகன்களின் ஆயுள் காலம் முடிந்து விட்டது. இதோ பார்! உனது தினத்தின் பிற்பகல் வந்து விட்டதை இது உணர்த்துகிறது. நப்பின்னை பிராட்டியின் தோழிகள் மூலம் கொண்டு வந்து


Email:sridharan_book@yahoo.co.in

சமர்ப்பிக்கப்பட்ட பாதுகையானது, உன்னைத் திருமஞ்சனம் செய்து கொள்ள அழைக்கிறது.

247. திவ்ய அப்ஸரோபி: உபதர்சித தீப வர்கே
ரங்காதிராஜ ஸுபகே ரஜநீமுகே அஸ்மிந்
ஸம்ரக்ஷிணீ சரணயோ: ஸவிலாஸ வ்ருத்தி:
நீராஜநாஸநம் அஸௌ நயது ஸ்வயம் த்வாம்

**பொருள்** - ஸ்ரீரங்கராஜனே! பரமபதத்தில் உள்ள அப்ஸரஸ்கள் பலரும் ஸந்த்யா காலம் ஆகி விட்டபடியால் தீபம் ஏந்தி, உனக்கு மங்கள ஆலத்தி எடுக்க வந்துள்ளனர். உன்னுடன் எப்போதும் உல்லாசமாக நடக்க வேண்டும் என்ற எண்ணமும், உனது திருவடிகளை எப்போதும் பாதுகாக்கவேண்டும் என்ற எண்ணமும் கொண்ட பாதுகையானது, உன்னை ஆலத்திக்கான ஆஸனத்தில் எழுந்தருளச் செய்ய வேண்டும்.

248. ஆஸநாத் உசிதம் ஆஸநாந்தரம் ரங்கநாத யதி கந்தும் ஈஹஸே
ஸந்நதேந விதிநா ஸமர்ப்பிதாம் ஸப்ரஸாதம் அதிரோஹ பாதுகாம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதா! நீ ஓர் ஆசனத்தில் இருந்து மற்றோர் ஆசனத்திற்குச் செல்ல விரும்புகின்றாய் போலும். அதனால்தான் நான்முகன் தனது கைகளில் உனது பாதுகையைத் தயாராக வைத்துக்கொண்டு நிற்கிறான் போலும். அவற்றைச் சாற்றிக் கொள்வாயாக.

249. பரிஜநவநிதாபி: ப்ரேஷித: ப்ராஞ்ஜலிஸ்த்வாம்
ப்ரணமதி மதநோ அயம் தேவ சுத்தாந்ததாஸ:
பணிபதி சயநீயம் ப்ராபயித்ரீ ஸலீலம்
பதகமலம் இயம் தே பாதுகா பர்யுபாஸ்தாம்

**பொருள்** - ஸ்ரீரங்கநாதா! அந்தப்புரத்தில் வேலைக்காரர்கள் மூலம் மன்மதன் அனுப்பப்பட்டுள்ளான். அவன் உன் முன்பாக குவிந்த கைகளுடன் நின்று கொண்டு வணங்கியபடி உள்ளான். ஆதிசேஷன் என்ற படுக்கைக்கு உன்னை எழுந்தருளிச் செய்ய பாதுகை தயாராக உள்ளது. ஆகவே தாமரை போன்ற உனது திருவடிகள் பாதுகையை விரைந்து அடைய வேண்டும்.

250. இதி நிகமவந்திவசஸா ஸமயே ஸமயே க்ருஹீதஸங்கேத:
அபி ஸரதி ரங்கநாத: ப்ரதிபதபோகாய பாதுகே பவதீ

**பொருள்** - நம்பெருமாளின் பாதுகையே! இப்படியாக அந்தந்த காலத்தில் இவற்றைச் செய்யவேண்டும் என்று வேதங்களாகிய வந்திகள் (துதி செய்பவர்கள் எனலாம்) மூலம் ஸ்ரீரங்கநாதன் உணர்கிறான். அந்தந்த காலத்தில் சுகங்களை அனுபவிக்கும் பொருட்டு உன்னை அடைகிறான்.

## வைதாளிக பத்ததி ஸம்பூர்ணம்

## ஸ்வாமி வேதாந்த தேசிகன் அருளிச்செய்த
## ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம்
## வைதாளிக பத்ததி ஸம்பூர்ணம்

## தூப்புல் பிள்ளை திருவடிகளே சரணம்